**புதுச்சேரி அரசு**
**புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம்**
**3வது தளம், புதுச்சேரி வீட்டுவசதி வாரிய வளாகம், அண்ணாநகர், புதுச்சேரி -5.**
**தொலைபேசி: 0413-2201256 தொலைநகல்: 0413-2203494**

***

## பொது அறிவிப்பு

இந்திய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் கடற்கரை ஒழுங்கு முறைமண்டல அறிவிப்பாணை, 2019-ன் படி புதுச்சேரி அரசு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்கும் திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தயாரித்துள்ளது.

கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து செயல்களும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின் படி ஒழுங்குமுறைப் படுத்தப்படும். புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தீர்மானிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் ஆலோசனைகளை அறிந்து கொள்ள பின்வரும் விவரத்தின் படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப் பட உள்ளது.

மேலும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ன் படி பொதுமக்களுக்கு வரைவு கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் தொடர்பான விளம்பரம் கொடுக்கப்படும். வரைவு திட்டம் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில் வரைவு திட்டம் திருத்தப்பட்டு சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒப்புதல் அளிக்கப்படும்.

திருத்தப்பட்ட காரைக்கால் பிராந்தியத்திற்கான வரைவு கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் நகல்கள் புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமத்தின் https://dste.py.gov.in/ppcc/CZMP-2019.html என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்கள் மற்றும் பதில்களை பொதுமக்கள் எழுத்து மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்கலாம்:

உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமம்,
3-வது தளம், புதுச்சேரி வீட்டுவசதி வாரிய வளாகம்,
அண்ணாநகர், புதுச்சேரி– 605 005.
மின்னஞ்சல்: dste@py.gov.in, ppcc@py.gov.in